(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 31.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, செத்தெம்பர் 25, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0115 / '09

1.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வலய இலக்கம் 01 எனக் கொள்ளப்படுகின்ற மொனறாகல, பதுளை, நுவரெலியா,இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சமூக நலனோம்பல் கருத்திட்டங்களுக்காக 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆண்டுகளில் தனித்தனியாக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட திகதி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலுத்தியுள்ள மொத்த தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி கருத்திட்டங்களின் மூலமாக நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வள வென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0240 / '09

2.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு செலுத்தப் படுகின்ற கொடுப்பனவானது 2009 ஆம் ஆண்டுக்கான வரவுத் திட்டத்தின் மூலம் 3000 ரூபாவிலிருந்து 5000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி அதிகரிக்கப்பட்ட தொகை இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போதிருந்தென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி தொகையைப் பெறுவதற்கு உரிமை பெற்றுள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

0281 / '09

3.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) புகையிரத வீதிகளை புனரமைப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப் பட்ட அம்பேபுஸ்ஸ கல் உடைத்தல் கருத்திட்டத்தின் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட வெடிமருந்துகளின் ஒருபகுதி பயன்படுத்த முடியாமல் அழிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அழிக்கப்பட்டுள்ள வெடிமருந்துகளின் நிதி ரீதியிலான பெறுமதி மற்றும் இப்பொருட்கள் அழிக்கப்பட்ட திகதி என்பவை யாவை என்பதையும்,

(ii) இத்தகைய வெடிமருந்துகளை கொள்வனவு செய்வதற்கும், பின்னர் அவற்றைப் பயன்படுத்தாமல் அழிப்பதற்கும் காரணம் என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0293 / '09

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 சனவரி 1 ஆந் திகதி முதல் 2008 தெசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலும் மற்றும் 2009 சனவரி 1 ஆம் திகதி முதல் இன்று வரையும்

(i) பெறப்பட்ட மொத்த கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு என்பதையும்,

(ii) அமெரிக்காவின் டொலரிக்கு ஒப்பீட்டின் அடிப்படையில் இலங்கை ரூபாவின் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(iii) இறக்குமதிக்கு எதிரான ஒதுக்கீடு விகிதத்தையும்,

(iv) வறுமை மட்டம் எவ்வளவு என்பதையும்,

(v) வறுமை மட்டத்திற்குக் கீழே சம்பாதிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) சென்மதி நிலுவை, எவ்வளவு என்பதையும்,

(vii) மானியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே (i) - (vii) சொல்லப்பட்டவைகளுக்கமைய நாடு முன்னேறியுள்ளதா அல்லது பின்தள்ளப்பட்டுள்ளதா என்பதை சான்றுகளுடன் அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0387 / '09

5.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வலப்பனை பிரதேச செயலகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாள் தொகுதி எவ்வளவென்பதையும்,

(ii) இப்பதவிகளை வகிப்போரின் பெயர்கள் மற்றும் உரிய கடமைப் பட்டியல்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகியுள்ள பதவிகள் மற்றும் இவ்வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன என்பதையும்,

(ii) இப்பதவிகளுக்கான கடமைகள் எவ்வாறு பேணப்படுகின்றன என்பதையும்,

(iii) நிலவுகின்ற வெற்றிடங்கள் நிறப்பப்படும் கால எல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0482 / '09

6.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் அரசாங்க செலவில் வெளிநாட்டு விஜயங்களில் பங்குபற்றினார்களா என்பதையும் ,

(ii) ஆமெனில், அது எந்த நாடுகளுக்கு என்பதையும் ,

(iii) அவ்வாறு பங்குபற்றியதன் நோக்கம் என்னவென்பதையும் ,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் வயது தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) மேற்படி விஜயங்களுக்கான மொத்த செலவு எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0485 / '09

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்திலுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி சபையினால் அதன் தலைமைக் காரியாலயத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்காக வெளியிலிருந்தும் தனியார் நிறுவனங்களிலிருந்தும் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்ளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி வாகனங்ளின் வகை மற்றும் இலக்கங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்,

(iv) மேற்படி வாகனங்கள் எந்த நிறுவனங்களிடமிருந்து அல்லது தனியார் உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இவர்களின் பெயர் மற்றும் முகவரி யாவையென்பதையும்,

(vi) மேற்படி வாகனங்களுக்காக செலுத்தப்படும் மாதாந்த வாடகை எவ்வள வென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) (i) கடந்த 2008 சனவரி முதல் இற்றைவரை ஒவ்வொரு வாகனமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட தூரம் எவ்வளவென்பதையும்,

(ii) இதற்கு செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி வாகனங்கள் நிறுத்திவைக்கப்படும் இடம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0491/'09

8.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— நிதி ,திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி சொத்துக்களில் முதலீடு செய்யுமாறு 2009 சனவரி 01 ஆம் திகதி நிதி ,திட்டமிடல் அமைச்சர் என்றவகையிலும் அதிமேதகு சனாதிபதி என்றவகையிலும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களிடமும் புலம்பெயர்ந்தவர்களாக தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களிடமும் கோரிக்கை விடுத்த கடிதத்திற்கு அமைவாக இத்தருணமாகும்போது எத்தனை இலங்கையர்கள் மேற்படி முதலீட்டு வாய்ப்பிற்காக பதிவு செய்துள்ளனரென்பதையும்,

(ii) இது தற்போது வெளிநாடுகளில் வசிக்கின்ற மற்றும் புலம்பெயர்ந்தவர்களாக தொழில்களில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கையில் எவ்வளவென்பதையும்,

(iii) இதற்கிணங்க திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தமையால் இந்நாட்டுக்கு கிடைத்துள்ள வெளிநாட்டு நிதிச்சொத்துக்களின் அளவு யாதென்பதையும்,

(iv) திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைத்துள்ள வெளிநாட்டு நிதிச்சொத்துக்களின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0241 /'09

9.

கௌரவ பேமசிறி மானகே,— சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கெப்பகரு தெகுரு" திட்டத்தின் கீழ் இலங்கையில் நிதி உதவிகள் வழங்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) ஒரு பிள்ளைக்கு வழங்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சசபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) "செவன சரண" "கெப்பகரு மாபிய" திட்டத்தின் கீழ் இலங்கையில் நிதி உதவி வழங்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) ஒரு பிள்ளைக்கு வழங்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறிய திட்டங்களை விஸ்தரிக்க தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) 2008 வருடத்தில் "கெப்பகரு தெகுரு" திட்டம் மற்றும் "செவனசரண கெப்பகரு மாபிய" திட்டத்தில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0390 / '09

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 சனவரி 01, 2008 சனவரி 01, 2009 சனவரி 01 ஆகிய திகதிகளில் உள்ளவாறாகவும் இற்றைவரையும்

(i) இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலீஸ் ஆகியவற்றிலுள்ளவர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்

(ii) ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006 சனவரி 1 ஆம் திகதியன்று உள்ளவாறான, 2009 மே 17 ஆந் திகதிக்குப் பிறகும் இந்த வீரமிக்க படையினருக்கு வழங்கப்படும் மேலதிக நன்மைகளையும்,

(ii) 2008 லும், 2009ல் இற்றைவரையிலும் ஆயுதப்படையினருக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும்,

(iii) இவ் வீடுகள் இலவசமாக வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iv) அவ்வாறில்லையெனின் கொடுப்பனவு விதிகளையும்,

(v) இந்த வீடமைப்பு நன்மைகளைப் பெற்றுக் கொண்ட வீரமிக்க படைவீரர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0484/ '09

11.

கௌரவ வை.எம்.நவரத்ன பண்டா,— சுகாதார நலத்துறை, போசனண அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 முதல் 2009 ஆம் ஆண்டின் இற்றைவரை "டெங்கு" காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி காலகட்டத்தினுள் மரணமடைந்த நோயாளிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) மேற்படி காலகட்டத்தினுள் "டெங்கு" நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அல்லது குறைவடைவதற்கு எவையேனும் விசேட காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், இவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) டெங்கு நோயை முற்றாக இல்லாதொழிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) "டெங்கு" ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச உதவி பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், எந்த நாடுகளிலிருந்தென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0486 /'09

12.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையில் (ஸ்ரீலங்கம) தற்போது கடமையாற்றும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) ஊழியர்கள் ஈட்டிக்கொள்கின்ற ஊழியர் சேமலாப நிதியத்தில் எவையேனும் ஒரு பணத்தொகை வட்டியாக வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) 2007 - 2008 ஆண்டுகளில் இவ்வாறு செலுத்தப்பட்டுள்ள வட்டித் தொகை யாதென்பதையும்,

(iv) மேற்படி ஆண்டுகளில் வட்டி செலுத்தப்படுதல் இடைநிறுத்தப்பட்டிருக்கு மாயின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) குறிப்பிட்டதொரு உத்தியோகத்தரினால் தான்தோன்றித்தனமாக மேற்படி ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி செலுத்தப்படுதல் இடைநிறுத்தப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) தொழிலாளர் வர்க்கம் இழந்துள்ள இப்பணத்தை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு அவர் தேவையான நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0495 /'09

13.

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,— கிராமியக் கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,--- (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 73 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) குறிப்பிடப்பட்டுள்ள "செங்கடகல நவோதய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளவாறு கண்டிய மக்கள் மத்தியில் நிலவுகின்ற பாரம்பரியக் கைத்தொழில்களை விருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(ii) இதற்கிணங்க இனங்காணப்பட்டுள்ள பாரம்பரியக் கைத்தொழில் வகைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) செங்கடகல பிரதேசத்தின் தனித்துவமான வளங்களைச் சார்ந்தவகையில் விருத்திசெய்யப்படுவதற்காக இனங்காணப்பட்டுள்ள கைத்தொழில்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0244 /'09

14.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் பிரசாவுரிமை பெற்றுள்ள சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) குறிப்பிட்ட இந்த இராணுவ உத்தியோகத்தர்களுக்கு மேற்குறிப்பிட்ட நாட்டின் பிரசாவுரிமை எப்பொழுது கிடைத்ததென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0487 /'09

15.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை போக்குவரத்து சபையின் நிதிப் பணிப்பாளர் இந்நிருவன ஊழியர்களின் சேமலாப நிதியத்தை தனியார் நிறுவனமொன்றில் சட்ட விரோதமான முறையில் வைப்பிலிட்டுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், இந்த சட்டவிரோதமான நிதி நிறுவனம் யாதென்பதையும்,

(ii) இங்கு வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

(iii) மேற்படி பணம் எப்போது வைப்பிலிடப்பட்டதென்பதையும்,

(iv) அன்றிலிருந்து இன்றுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி எவ்வள வென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) “செலான் செக்குயுரிடி அன்ட் பினேன்ஸ் பிரைவெட் “ நிறுவனத்தில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இந்நிறுவனத்திலிருந்து கிடைக்கின்ற வட்டியை நிதிப் பணிப்பாளர் தமது சொந்த கணக்கில் வைப்பிலிட்டுள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்று சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 12.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப் பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2009 ஒற்றோபர் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

தொழில் உறவுகள், மனித வலு அமைச்சர்,— வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே 19 திகதிய 1602/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2009. 09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46 ஏ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படு அச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 29 ஆம் திகதிய 1603 /44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*3.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*6.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*12.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

27.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

30.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

31.

கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.